இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 217 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 05 – வியாழக்கிழமை 19 மார்ச் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 217 : Thiruvalluvar Year - 2057 - Panguni 05 - Thursday 19 March 2026 - Chennai 12 Pages ₹ 5.00

## தி.மு.க.வுக்கு வாக்களிக்காதவர்களும் பாராட்டும் ஆட்சி!

# ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைப் பயணம் தொடரும்!

## காணொளி பதிவை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.3.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதையொட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

**சென்னை, மார்ச் 19 -**

**“தி.மு.க.வுக்கு வாக்களிக்காதவர்களும் பாராட்டுகின்ற ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைப் பயணம் தொடரும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி பதிவை வெளியிட்டு உறுதிபடக் கூறியுள்ளார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு கடந்த 5 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் சாதனைத் திட்டங்களால், தமிழ்நாடு பல மடங்கு முன்னேறி உள்ளதாக சாமானியர் ஒருவர் பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.**

அந்த வீடியோவில் அவர் பேசியதாவது:–

நான் தி.மு.க.வுக்கு வாக்களித்ததில்லை, ஆனால், இம்முறை தி.மு.க.வுக்குத்தான் வாக்களிப்பேன். எடப்பாடி பழனிசாமியின் ஆட்சியில் சாதனைகள் என எதுவுமில்லை.

கடந்த 5 ஆண்டுகளில் ஏராளமான சாதனைகளை முதலமைச்சர் செய்துள்ளார்.

வெளிநாடுகளுக்குச் சென்று பயிலும் மாணவர்களுக்கு “அம்பேத்கர் அயலக உதவித் திட்டம்” ஒரு சிறந்த உதாரணம். கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத பல சாதனைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்துள்ளார்.

**நான் படிக்கும் காலத்தில் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இல்லையே என வருத்தம் உள்ளது.**

**நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற திட்டங்களால் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.**



**மகளிர் உரிமைத்தொகை, விடியல் பயணம் போன்ற திட்டங்கள், பெண்களின் சுய மரியாதையை உயர்த்துவதாக உள்ளது.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களை அடுத்த 100 ஆண்டுகளுக்கு யாராலும் மாற்றிவிட முடியாது. “நான் கொண்டு வந்த திட்டங்களை யாராவது ரத்து செய்ய நினைத்தால் போராட்டங்கள் வெடிக்கும்” என பேரறிஞர் அண்ணா கூறினார்.**

நமது முதலமைச்சரின் திட்டங்களை ரத்து செய்ய நினைத்தால், அண்ணா கூறியதைப் போல போராட்டங்கள் வெடிக்கும். ஆளுமை ஏதும் இல்லாத எடப்பாடியின் குற்றச்சாட்டுகளில் எந்த முகாந்திரமும் இல்லை. தேவையான நிதியை ஒதுக்காமல் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒன்றிய அரசு தடுக்கிறது.

சிறந்த பொருளாதார நிபுணரைப் போல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுகிறார். ஒன்றிய அரசின் தடைகளை மீறி தமிழ்நாடு முன்னேறி உள்ளது தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ந்துள்ளது. மகளிர் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது

இந்தியா சுதந்திரம் பெற்ற போது பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு கடைக்கோடியில் இருந்தது. தற்போது முதலிடத்தில் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல அற்புதங்கள் நடந்துள்ளன. முதலமைச்சரின் சாதனைகளால் நான் முதல்முறையாக தி.மு.க.வுக்கு வாக்களிக்கப் போகிறேன் – என்று அவர் பேசியுள்ளார்.

இக்காணொளியை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

**ஆட்சிப் பொறுப்பேற்றதும், வாக்களித்தவர்கள் மகிழ்ச்சியடைவது மட்டுமல்ல; வாக்களிக்காதவர்களும், இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று எண்ணும்படியான ஆட்சியை வழங்குவேன்” என்று சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளேன் என்பதற்கு இந்தக் காணொளியே சான்று எனத் தெரிவித்துள்ளார்.**



வீடியோவில் பேசிய சாமானியர்

**நாம் ஒற்றுமையாக ஓரணியில் இருக்கும்வரை இந்தச் சாதனைப் பயணம் தொடரும்! தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

### சட்டவிரோத பணப்பரிமாற்றம்!

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் 7 பேர் மீது புகார்!

### சென்னை உயர்நீதிமன்றத்தில் இரா.கிரிராஜன் எம்.பி. மனு!

சென்னை, மார்ச் 19 -

சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்ட புகாரில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் 7 பேருக்கு எதிராக அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் 7 பேர் மீது சட்ட விரோத பணிப்பரிமாற்ற புகார் எழுந்துள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணி, சி.விஜய பாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர், காமராஜ், கே.சி.வீரமணி, கே.பி.அன்பழகன் மற்றும் தியாகராய நகர் முன்னாள் எம்.எல்.ஏ. சத்யா நாராயணன், எடப்பாடி பழனிச்சாமி உறவினர் சேலம் இளங்கோவன் ஆகியோர் மீதான சட்டவிரோத விரோத பணப்பரிமாற்ற புகாரில் முகாந்திரம் இருப்பதால், அவர்கள் மீது அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்ய உத்தரவிட வேண்டும் என மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

தி.மு.க. எம்.பி., கிரிராஜன் தாக்கல் செய்துள்ள மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வர உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றம் செயல்படும் நாட்களை அதிகரிக்க வேண்டும்!

### ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 19 -

நாடாளுமன்றம் செயல்படும் நாட்களை அதிகரிக்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சிகளின் பேச்சுக்களை நீக்குவதை கைவிட வேண்டும் என்றும் ஒன்றிய அரசுக்கு மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களவையில் உறுப்பினர்கள் 59 பேர் ஓய்வு பெறும் நிலையில், அவர்களுக்கு பிரியாவிடை அளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்போது பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ஓய்வு பெறும் 59 உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் சிறப்பாக செயல்பட்டதாக பாராட்டு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், நாடாளுமன்றம் செயல்படும் நாட்களை அதிகரிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் ஏழைகள், விவசாயிகள் உள்ளிட்டோரின் பிரச்சினைகளை அதிகமாக விவாதிக்க அனுமதிக்க வேண்டும்.

ஜனநாயக முறையில் விவாதம் நடைபெற வேண்டும். எதிர்க்கட்சியினர் பேசும் போது அடிக்கடி, பேச்சுகளை நீக்குவதை கைவிட வேண்டும். அப்படி நீக்கினால் அது அர்த்தமற்றதாகிவிடும் என்று மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.



## திராவிட மாடல் 2.0 அமையும்வரை, உறங்காமல் உழைத்திடுவோம்!

